Process Safety Beacon
Messages for Manufacturing Personnel
www.aiche.org/ccps/process-safety-beacon

An AIChE Technology Alliance CCPS Center for Chemical Process Safety
aiche.org/ccps

This issue sponsored by ioMosaic® Minimizing risk. Maximizing potential.®
www.iomosaic.com

# சற்றே தவறிய நிகழ்வுகள் எதிர்கால விபத்துகளுக்கான எச்சரிக்கை.

ஜனவரி 2026





*Figure 1. Metrics triangle from CCPS Process Safety Metrics Guide (Version 4.1 2022)*

காற்றழுத்த (Compressed Air) லைனில் உள்ள ஒரு வால்வை பராமரிப்பு பணியாளர் கழற்ற தொடங்கினார். லைனில் அழுத்தம் இல்லை என்று கூறப்பட்டிருந்தாலும், சிறிதளவு காற்றழுத்தம் வெளியே வந்தது. ஆனால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

வழக்கமான ஆய்வுகளின் போதும் , ஆபரேட்டர் , சில சாம்பிள் பாயிண்ட்களில் காப்புகள் ( caps ) அகற்றப்பட்ட நிலையில் இருப்பதை அவர் கண்டறிந்தார்; ஆனால் எந்த கசிவு அல்லது வெளியீடும் ஏற்படவில்லை

இந்த இரண்டும் Near Miss (சற்றே தவறிய நிகழ்வுகள் ) என்பதற்கான எடுத்துக்காட்டுகள் ஆகும்; சில நிறுவனங்கள் இதனை Near Hit என்றும் குறிப்பிடுகின்றன.

## சற்றே தவறிய நிகழ்வுகள்

நிலைகள் வேறாக இருந்திருந்தால் அல்லது நிகழ்வு தொடர்ந்து நடந்திருந்தால் , காயம் அல்லது இழப்பு ஏற்பட்டிருக்கக்கூடிய திட்டமிடப்படாத நிகழ்வுகள் , ஆனால் உண்மையில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாதவையே சற்றே தவறிய நிகழ்வுகள். "(CCPS சொற்பொருள் அகராதி – CCPS Glossary)

பெரும்பாலான நிறுவனங்கள் விபத்துகளை பதிவு செய்து விசாரணை செய்கின்றன. பல நிறுவனங்கள் (Near-miss) சற்றே தவறிய நிகழ்வுகளையும் பதிவு செய்கின்றன. இவை சிறிய நிகழ்வுகள் என்றாலும், எதிர்காலத்தில் பெரிய விபத்துகள் ஏற்படக்கூடிய நிலைகளை காட்டும் நல்ல எச்சரிக்கையாக கருதப்படுகின்றன.

படம் 1-ல் காட்டப்பட்டுள்ள மெட்ரிக்ஸ் முக்கோணத்தில் Near-miss (சற்றே தவறிய விபத்து) நிகழ்வுகள் Tier 3-இல் அடங்குகின்றன. முழுமையான CCPS Process Safety Metrics Guide-ஐ கீழ்காணும் இடத்தில் பார்க்கலாம். https://www.aiche.org/sites/default/files/docs/pages/ccps_process_safety_metrics_-_v4.1.pdf

## உங்களுக்கு தெரியுமா?

- சற்றே தவறிய நிகழ்வுகள் – கூடுதல் எடுத்துக்காட்டுகள்
  - நடைமுறையில் பயன்படுத்தப்படும் செயல்முறை (Operating Procedure) விளக்கங்கள் , சமீபத்திய பதிப்பல்ல என்பதனை கண்டறிதல்
  - ஒரு செயல்முறை கருவி (Process Instrument) பராமரிக்காமல் மோசமாக இருத்தல் அல்லது காலிப்ரேஷன் (Calibration) செய்யப்படவில்லை என கண்டறிதல்..
  - பணியிட ஆய்வு அறிக்கைகளில் தேவையான தகவல் அல்லது தரவு காணாமல் போனதை கவனித்தல்
  - கையிருப்பில் (Warehouse) இருக்க வேண்டிய மூலப்பொருள் பல்லெட் (Pallet) சில நாட்கள் துறைமுகத்திலேயே (Dock) வைத்திருத்தல்
- சற்றே தவறிய நிகழ்வுகள், ஒரு அல்லது அதற்கு மேற்பட்ட செயல்முறை பாதுகாப்பு அமைப்புகளில் உள்ள பிரச்சினைகளை காட்டும். இவற்றை சரிசெய்யாவிட்டால், எதிர்காலத்தில் பெரிய விபத்து ஏற்படக்கூடும்
- சற்றே தவறிய நிகழ்வுகளுக்கு முழுமையான விசாரணை அவசியமாக இல்லாவிட்டாலும், எதிர்காலத்தில் பெரிய விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ள நிலைகளை காண்பதற்காக, அவைகள் பதிவிடப்பட வேண்டும், சேகரிக்கப்பட வேண்டும் மற்றும் பகுப்பாய்வு செய்யப்பட வேண்டும்,
- ஒவ்வொரு நிறுவனத்திற்கும் சற்றே தவறிய நிகழ்வுகள் குறித்த தனித்தனி வரையறைகள், மற்றும் அவற்றை அறிக்கையிடும் அமைப்புகள் உள்ளன
- எல்லா சற்றே தவறிய நிகழ்வுகளும் பணியிடத்தில் (Field) மட்டுமே நடைபெறுவதில்லை; அவை கட்டுப்பாட்டு அறை (Control Room), பராமரிப்பு பணிமனை அல்லது வேறு எந்த இடத்திலும் நிகழக்கூடும்.
- நடைமுறையில் இருக்கும் சற்றே தவறிய நிகழ்வுகளை அறிக்கையிடும் அமைப்பு, ஒரு நல்ல செயல்முறை பாதுகாப்பு பண்பாட்டினை குறிப்பதாகும்.
- பல நிறுவனங்கள் சற்றே தவறிய நிகழ்வுகளை முறையாக மதிப்பாய்வு செய்து, மேம்படுத்த வேண்டிய பகுதிகளை கண்டறிகின்றன.

## நீங்கள் என்ன செய்ய வேண்டும்?

- உங்கள் நிறுவனத்தில் சற்றே தவறிய நிகழ்வுகள் ( Near miss அல்லது Near Hit ) என்பதற்கான வரையறை என்ன என்பதையும், அதை எவ்வாறு அறிக்கையிட வேண்டும் என்பதையும் தெளிவாக அறிந்து கொள்ளுங்கள்.
- உங்கள் தினசரி பணிகளில், சற்றே தவறிய நிகழ்வுகளை கவனியுங்கள். நீங்கள் நினைத்ததைவிட அதிகம் இருக்கக்கூடும்..
- சற்றே தவறிய நிகழ்வுகளை உங்கள் மேற்பார்வையாளருக்கு தெரிவியுங்கள்
- பாதுகாப்பு கூட்டங்களில், சற்றே தவறிய நிகழ்வுகள் அறிக்கைகளில் இருந்து என்ன கற்று கொண்டீர்கள் என்பதைப் பற்றி எல்லோரிடமும் கேளுங்கள்..

**சற்றே தவறிய நிகழ்வுகளை தெரியப்படுத்துங்கள்,**
**சிறிய பிரச்சினைகளை சரிசெய்தல், பெரிய விபத்துகளை தடுக்கும்**

©AIChE 2026. All rights reserved. Reproduction for non-commercial, educational purposes is encouraged. However, reproduction for any commercial purpose without express written consent of AIChE is strictly prohibited. Contact us at ccps_beacon@aiche.org or +1 646-495-1371.